# தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம் அடைவுகளும் சாதனைகளும்

எம்.ஏ.ஹபீழ் ஸலபி




இலங்கையில் பிரித்தானிய காலணித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான சுதந்திரக் கோசம் மேழுகின்ற காலகட்டத்தில், இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் ஊடுறுவி இருந்த இணைவைப்புக் கோட்பாட்டை எதிர்த்து ஏகத்துவக் கோட்பாட்டை நிலைநாட்ட அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்கள் 11-11-1947 அன்று ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவை ஆரம்பித்து வைத்தார்கள், அன்றைய சூழலில் புனித இஸ்லாம் பற்றிய தெளிவற்ற இலங்கை சமூகத்தில் இவரது போதனைகள் அந்நியமான ஒன்றாகத் தோன்றியது.

அல்குர்ஆன் அஸ்ஸுன்னா மாத்திரமே பின்பற்றத் தக்கது என்ற உன்னத நோக்கோடு, அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களால் ஜம்இய்யா ஆரம்பிக்கப்பட்டதோடு, அவர், நாட்டின் பல பாகங்களிலும் தாருத் தவ்ஹீத் என்று ஏகத்துவக் கல்வி மையங்களையும் உருவாக்கியதன் மூலம் இலங்கை முஸ்லிம் சமூகத்திடம் மலிந்திருந்த மூட நம்பிக்கைகளையும் மார்க்க அறிவு மந்த நிலையையும் மாற்றி, அறிவு - ஆன்மிகம் ஆகிய வழிகளில் சிந்திக்கவும் வழிபடவும் தக்க ஒரு சமூக மாற்றத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்த முனைந்தார்.

இலங்கையில் ஏகத்துவ எழுச்சியின் துவக்கப் பள்ளி எது என்றால், அது அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களால் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னைய ஆண்டு துவக்கிவைக்கப்பட்ட ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாதான். ஸ்தாபகரின் மறைவைத் தொடர்ந்து, இந்த இயக்கத்தை முன்னணிக்குக் கொண்டுவந்த பெருமை அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களுக்கே உரியது. இன்று இலங்கையில் பல்வேறு ஏகத்துவ அமைப்புகளின் உருவாக்கத்தின் தாய்ப் பள்ளியாக ஜம்இய்யாதான் திகழ்கிறது.

இந்த சமூக நலத்திட்ட அமைப்பின் முக்கிய கல்வி நிறுவனமாக தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாக் கலாபீடம் திகழ்கிறது. இதன் பழைய மாணவர் அமைப்பினால் 28-01-2018 அன்று கண்டி Oak Ray regency Hotel ல் ஏற்பாடு செய்யப்பட்ட (DHAERA SOUVENIR OF NATIONAL CONFERENCE-2018) தேசிய மாநாட்டில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த NATIONAL CONFERENCE ல் *Panel Discussion* ஒன்றும் நடைபெற்றது. இது, இலங்கை அரபு போதனா பீடங்கள் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இலங்கை தஃவா, கல்வி வரலாற்றில் முக்கிய பங்களிப்பை வழங்கிவரும் ஜம்இய்யாவின் கல்வி நிறுவனங்கள் பற்றிய சிறு அறிமுகத்தை இங்கு வழங்குகின்றோம்.

## தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா ஆண்கள் கலாபீடம் :

08-08-1983 அன்று தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாக் கலாபீடம் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களால் பறகஹதெனிய கிராமத்தில் பொல்வத்தை என்ற மலையடிவார கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று, போதிய அடிப்படை வசதிகள் இன்றி மிக எளிமையாக ஆரம்பிக்கப்பட்ட இக்கலாபீடம் இன்று பல வளங்கள் நிறைந்த, இலங்கையில் முன்னணி அரபு கலாபீடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

"இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் (MRCA/13/1/AC/73) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலும் (இல.18359) பதிவு செய்யப்பட்டு (தேசிய) அங்கீகாரம் பெற்றுள்ளது, ஸலபிய்யா கலாபீடம். 1998 ஆம் ஆண்டு மதீனா இஸ்லாமியப் பல்கலைக்கழகமும், ரியாத் அல் இமாம் முஹம்மது இப்னு ஸஊத் பல்கலைக்கழகமும் பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன. குறுகிய காலத்தில் சர்வதேச உலகில் புகழ் பெற்ற இரு பல்கலைக்கழகங்கள் கலாபீட பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை எமது கலாபீட மாணவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்."
ஏ.எல். கலீல் ரஹ்மான் M.A : 2018 ப :15,16

இலங்கையில் அரபி மொழி மூலமான இஸ்லாமியக் கல்வி, தஃவா என்பன மூலம் மக்கள் மத்தியில் சத்திய இஸ்லாம் பற்றிய வழிப்புணர்வையும்; ஏகத்துவ எழுச்சியையும் ஏற்படுத்தி, கொள்கையை நடைமுறைப்படுத்தி, பெரும் எண்ணிக்கையானோரை அதன் வழி வாழவைத்ததில் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாக் கலாபீடத்திற்கு நான்கு தாசாப்தத்தை அண்மித்த வரலாறு உண்டு. இக்கலாபீடம்

மார்க்கக் கல்வியோடு நவீன கலைகள் பற்றிய தெளிவை வழங்கியதில் இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கும் தேசிய நலனிற்கும் பெரும் பங்காற்றியுள்ளது.

அல்குர்ஆன் அஸ்ஸுன்னா ஆகிய மூலாதார வழி முறையில் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களால் அமைக்கப்பட்ட ஸலபிய்யாக் கல்வி நிறுவனத்தில் முற்போக்கான கல்வித் திட்டத்தை புகுத்தி, ஸலபுஸ்ஸாலிஹீன்களின் மரபுவாத சிந்தனையின் செல்நெறி நின்று, இன்றைய காலத்தின் அறைகூவலுக்குத் தேவையான புதிய போக்கின் தேவைப்பாட்டையும் அங்கீகரித்து, தனது மாணவர்களிடம் நவீன உலகின் ஒழுங்கைப் புரிந்து கொள்ளும் விரிந்த ஆளுமையை ஏற்படுத்தியுள்ளார். அதனால், இதன் பட்டதாரிகளான ஸலபிகள் பல்துறையில் பரிணமித்துள்ளனர்.

"கற்பித்தல் முறையில் விரிவுரைத் (Lecture) தன்மையையும் மாணவர் மையக் கல்வி முறையையும் அவர் கடைப்பிடிப்பார். ஒரே (Teaching Methodology) வழிமுறையில் கற்பித்தல் செயற்பாட்டை அணுகாமல், பாடவிதானங்களுக்கு ஏற்ப மாணவர்களுக்கு புரிய வைப்பதில் அவரது கற்பித்தல் முறையில் தேவையான மாற்றங்களை அவ்வப்போது மேற்கொள்வார். அத்தோடு, 1983 களிலேயே (Type Writter) தட்டச்சு இயந்திரத்தில் வேகமாக டைப் பண்ணும் ஆற்றலும் அவருக்கு இருந்தது. 1990 களில் கணினியைப் பயன்படுத்தவும் அவர் தெரிந்திருந்தார். ஜம்இய்யாவின் அறிக்கைகளை அவரே கணினியைப் பயன்படுத்தி தயார் பண்ணினார். மாணவர்களுக்கான தஸ்கிய்யாவை அவரே டைப் பண்ணி வழங்கினார்" என்று அவரிடம் உஸூலுல் பிக்ஹ், அல் அகீததுல்வாஸிதிய்யா, பராயிழ் போன்றவற்றைக் கற்ற, அவரது முக்கிய, ஆரம்பகால மாணவர;களில் ஒருவரான கலாநிதி எம்.எல். முபாரக் மதனி அர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இன்று நவீன கற்பித்தல் முறைகளில் கவன ஈர்ப்பைப் பெற்று, பேசுபொருளாகியுள்ள மாணவர் மையக் கல்வி முறைமையை 30 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் தனது கலாபீடக் கற்பித்தல் செயற்பாட்டில் பிரயோகித்துள்ளார் என்பது வியப்புக்குரியது. 69வது அகவையில் உள்ள அவர் ஓர் இளைஞனுக்குரிய மிடுக்கோடு, இன்றுவரை கற்பித்தல் செயற்பாட்டையும் தஃவாவையும் விடாமல் தொடர்கிறார்.

28-01-2018 ஞாயிறு அன்று நடைபெற்ற தாயிரத்துஸ் ஸலபிய்யீன் எனும் ஸலபிய்யவின் பழைய மாணவர் அமைப்பினரால் நடாத்தப்பட்ட தேசிய மாநாட்டில் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் கலந்து கொண்டு, ஸலபிய்யாவை உருவாக்கியதன் நோக்கம், அதன் இலக்கு நோக்கிய பயணத்தில் அதன் சாதனைகள் பலவற்றை பட்டியலிட்டதோடு, இன்று அது சர்வதேசிய அங்கீகாரம் பெற்றுள்ளமை பற்றி சுருக்கமாக அரபி மொழியில் ஒரு சொற்பொழிவையும் நிகழ்த்தினார்.

தாயிராவின் தேசிய மாநாட்டிற்கு வருகை தந்திருந்த தனது மாணவர்களின் பல்துறை உயர்ச்சி அடைவுகளைக் கண்டு, அவர் பூரித்துப் போனதை அனைவராலும் அவதானிக்க முடிந்தது. நான்கு தசாப்தங்களுக்குக் கிட்டிய அவரது அயராத, இடைவிடாத உழைப்பின் அறுவடையை ஒரு கூரையின் கீழ் அவதானித்த மகிழ்ச்சியில் அவரது இயல்புத் தன்மையில் கூட அந்த நிகழ்வு மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. மிகவும் இரக்க குணப் பண்போடு, ஒவ்வொரு மாணவனையும் தந்தையின் பரிவோடு தனித்தனியாக ஆரத் தழுவி நலன் விசாரித்துக் கொண்டார். புகைப்படத்திற்கு அதிக ஆர்வம் காண்பிக்காத அவர், அன்று தனது அனைத்து மாணவர்களும் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள அனுமதித்தார்.

பெரிய குழு ஒன்றிற்கு நிரந்தர நன்மை தரும் பயனுள்ள கல்வியை வழங்கி, இகபர நலனைப் பெறத்தக்க வழியைக் காட்டி, அதை நன்றியோடு நினைத்து, ஆத்மார்த்தமாக தனக்காக துஆச் செய்யக் கூடிய, தனது சேவையை தொடர்ந்து நகர்த்திச் செல்லக் கூடிய ஆளுமைகளை தான் உருவாக்கிவிட்ட ஒரு மனநிறைவு அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்கள் தனக்குக் காட்டிய கல்வி வழிகாட்டலைப் போன்று, தனது மாணவர்களுக்கு எந்தக் குறையுமின்றி, பன்மடங்கு அதிகமாகவே இவர் சேவையாற்றியுள்ளார். தற்போது, சவுதி அரேபியப் பல்கலைக்ககழங்களில் ஸலபிகள் அதிகமான நுழைவு அனுமதி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இலங்கை வரலாற்றில், மதீனா இஸ்லாமியப் பல்கலைக்ககழத்தின் மூலம் முதலாவது கலாநிதி பட்டம் பெற்றவரும் இவரின் மாணவரே என்பது இவரின் இன்னொரு வரலாற்றுச் சாதனையாகும்.

தஃவா, உயர்கல்வி, அரச - தனியார் பொதுத்துறை என்று விரிந்த தளத்தில் தனது மாணவர்கள் வாய்ப்புகளை பெற்றுள்ளமையை அவர் அங்கு காணும் போதும் அதற்காக அவர்கள் பாராட்டப்பட்டபோதும் அவரது முகத்தில் ஒரு மலர்ச்சி தென்பட்டது. அவர் மிகவும் சந்தோசமாக இருந்த சந்தர்ப்பங்களில் தாயிராவின் (28 ஜனவரி 2018) தேசிய மாநாடும் ஒன்று எனலாம்.

1998ம் ஆண்டு ஸலபிய்யாக் கலாபீடத்திற்கு தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த "அல்முபீன்" மாத இதழ் ஆசிரியர் அவர்கள் ஸலபிய்யாவைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"...மவ்லவி பட்டம் பெற வேண்டும் என்பதற்காக, இலங்கை மாணவர்கள் (இந்தியா) தமிழகத்திற்கு வந்து படித்துச் செல்வார்கள். ஆனால், தற்போது அங்கே பல கல்விச் சாலைகள், குறிப்பாக JSAM சார்பில் "தாருத் தவ்ஹீத் அரபிக் கல்லூரி" ஒன்று நடத்தப்படுகிறது. அதன் பாடத்திட்டங்கள் தரமானவை. நவீன கால கல்வி நிலைகளுக்கு ஏற்ப "கம்ப்யூட்டர்" வகுப்பும் நடத்தப்பட்டு வருகிறது.

மாணவர்கள் சார்பில் நடத்தப்படும் மாணவர் சொற்பயிற்சி மன்றத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்பப்பா! எத்துனை வேகம்! எத்துனை ஆழமான கருத்துக்கள்! வியப்புறும் வகையில் வார்த்தைகள் வந்த வண்ணமே இருந்தன. மாணவர்களிடம் இந்த அளவுக்கு பயிற்சி அளித்த ஆசிரியர்களை பாராட்டாமல் இருக்க முடியாது." பெருநாள் மலர் ஹி- 1419 P:59

இக்கலாபீடத்தில் நுழைவு வாய்ப்பை இழந்தவர்கள் "நானும் ஒரு ஸலபிய்யாக இருந்திருக்கக் கூடாதா?" என்று ஏக்கம்கொள்கின்ற அளவு இந்தக் கலாபீடம் இலங்கை சமூகத்தில் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

ஸலபிய்யாக் காலாபீடம் (Incorporated by Act of Parliament No. 24 of 2008) பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, அரச அங்கீகாரமும் பெற்றுள்ளமை அதன் இன்னொரு பரிமாணமாகும்.

அத்தோடு, அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் பின்வரும் பல்கலைக்கழகங்களுடனும் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடத்திற்கு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

இஸ்லாமிய பல்கலைக்கழகம் மதீனா

அல் இமாம் முஹம்மத் இப்னு சுஊத் பல்கலைக்கழகம் - ரியாத்

உம்முல் குரா பல்கலைக்கழகம் - மக்கா

குவைத் பல்கலைக்கழகம் - குவைத்

மன்னர் சுஊத் பல்கலைக்கழகம் - ரியாத்

மஃஹத் அல் ஹரமுல் மக்கீ - மக்கா

அல் மஃஹத் அத்தீனி - குவைத்

இப்பல்கலைக்கழகங்களில் பல தாருத் தவ்ஹீத் மாணவர்கள் உயர்கல்வி கற்கும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

## ஸலபிய்யா நூலகம் :

ஒரு கலாபீடம் ஆய்வுத் தேடலுள்ள மாணவர்களை சமூகத்திற்கு வழங்குவதற்கு அதன் நூலகம் பெரும்பங்காற்றுகிறது. வாசிப்பற்ற எந்த மனிதனும் நிறையறிவு பெறமுடியாது. இதை அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள் என்பதை அவர் ஸலபிய்யா வளாகத்திற்குள் திறந்து வைத்த நூலகம் வெளிக்காட்டுகிறது.

ஸலபிய்யா வளாகத்திற்குள் எனக்கு மிகவும் விருப்பத்திற்குரிய இடம் அதன் நூலகம்தான். எனது அறிவு விருத்தியிலும் எழுத்தாற்றல் வளர்ச்சியிலும் அது முக்கிய இடத்தைப் பெறுகிறது. அந்த நூலகத்தில் நான் சிறிது காலம் துணை நூலகனாக பணியாற்றியுள்ளேன்;.

அக்காலப்பகுதியில் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் அடிக்கடி **“அல்அஹ்காம் பீ உஸூலில் இஹ்காம்”** என்ற நூலை இரவல் பெறுவார்கள்.

அன்று, பெரிய வசதிகள் இல்லாததால் ஜம்இய்யாவின் Banner களை நூலகத்தின் மேசைகளிலேயே வைத்து வரைவேன். Banner வரைந்து முதுகு வலிக்கும் போது, சிறிது ஓய்வுக்கு எனக்கு உதவுவது அங்குள்ள நூல்கள்தான். சில பக்கங்களை வாசிப்பதுதான் அந்த ஒய்வு. அந்த வாசிப்புத்தான் நூல்கள் மீது ஆர்வத்தை மேலும் அதிகரித்தது. வாசித்தவைகளை எழுதவும் ஆரம்பித்தேன். மாணவனாக இருக்கும் போதே இந்திய, இலங்கை சஞ்சிகைகளிலும் மாத இதழ்களிலும் எனது கட்டுரைகள் பிரசுரமாகின.

அல்முபீன் சிறப்பிதழுக்கு நான் எழுதிய கட்டுரை ஒன்று நான்காம் ஆண்டு படிக்கும்போது எனது 15 வயதில் நூலாக்கப்பட்டது. அந்தப் பெருமை எனது மஃஹதிற்கே உரித்தானது.

நூலகத்தில் பணியாற்றிய போது, பலரது ஆய்வுகளுக்கும் கட்டுரைகளுக்கும் பயான்களுக்கும் குறிப்பெடுக்க உதவியது மனநிறைவைத் தந்தது. எனக்கு நூலகத்தில் பொறுப்பு வழங்கிய அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களுக்கும் செயலர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் இருவருக்கம் அல்லாஹ் அருள் புரிவானாக!

தனது ஆசான் அல்பானி அவர்களின் ஆழமான வாசிப்புப் பற்றி அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் அடிக்கடி எங்கள் வகுப்புகளில் குறிப்பிடுவார்கள். அல்பானி அவர்கள் ஒரு நாளைக்கு 16 மணி நேரங்களை வாசிப்புக்காகவும் ஹதீஸ் பகுப்பாய்வுக்காகவும் தனது ஆய்வுத் தேடல் முடிவுகளை எழுதுவதற்காகவும் ஒதுக்கியுள்ளார்கள். அத்தகைய அறிஞரின் ஒரு மாணவர்தான் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி என்பதன் அடையாளமே ஸலபிய்யா நூலகம். ஏனெனில், தாருத் தவ்ஹீத் ஆரம்பிக்கப்பட்ட மறு வருடமே அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் நூலகத்தை திறந்துவைத்தவிட்டமை அதையே உணர்த்துகிறது.

ஸலபிய்யாவின் நூலகம் பற்றி DHAERA SOUVENIR OF NATIONAL CONFERENCE-2018 ல், செயலர் ஏ.எல். கலீல் ரஹ்மான் எம்.ஏ.அவர்கள் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“ தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடத்துடன் இணைந்ததாக 1984 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி தாருத் தவ்ஹீத் நூலகம் கலாபீடத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகம் விரிவுரையாளர்களதும் மாணவர்களதும் அறிவு விருத்திக்கும், ஆராய்ச்சி உணர்வுக்கும் பெரும் பங்காற்றி வருகின்றது. இன்று இலங்கையிலுள்ள மிகப் பெரிய நூலகங்களுல் ஒன்றாக இது வளர்ச்சியடைந்து வருகின்றது. இது தற்போது சுமார் 15000 (பதினைந்தாயிரம்) நூல்களை உள்ளடக்கியதாகக் காட்சி தருகின்றது. குறிப்பாக, அரபு மொழியில் தொகுக்கப்பட்ட அகீதா, தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், வரலாற்றுக் கலை தொடர்பான நூல்களும் நவீன இஸ்லாமிய அறிஞர்களது படைப்புக்களும் காணப்படுகின்றன. தமிழ், ஆங்கிலம், சிங்களம், உருது ஆகிய மொழிகளில் இஸ்லாம் மற்றும் பொது அறிவு நூல்களும் உள்ளன. ப 10

கலாபீட வளாகத்திற்கு வெளியே உள்ளவர்கள் ஏனைய இஸ்லாமிய கலாபீட மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரது ஆய்வு முயற்சிக்கும் இந்நூலகம் பெரும் பங்காற்றி வருகின்றது.

இலங்கையின் தரமான சகல வசதிகளையும் கொண்ட ஒரு நூலகமாக தாருத் தவ்ஹீத் நூலகத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கும் நூலகத்துடன் இணைந்ததாக ஆய்வு முயற்சிகளை விரிவுபடுத்த தனியான ஆய்வு மையமொன்றை ஏற்படுத்தவும் கலாபீட நிருவாகம் முயற்சிகளைச் செய்து வருகின்றது."

## தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா பெண்கள் கலாபீடம் :

இலங்கை தஃவாக் களத்தில் ஆண்- பெண் ஆகிய இரு பாலாரின் சமநிலைப் பங்களிப்பு வேண்டும் என்று உணர்ந்த அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள், தாருத் தவ்ஹீத் மூலம் ஸலபி ஆலிம்களை உருவாக்கியது போன்று, ஆலிமாக்களையும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் ஸலபிய்யா உதயமான அதே பொல்வத்தை என்ற மலையடிக் கிராமத்தில் 2017 மார்ச் மாதம் 30 ஆம் திகதியன்று அஸ்ஸலபிய்யா பெண்கள் கலாபீடத்தை ஆரம்பித்துவைத்தார்.

முஸ்லிம் சமூக அமைப்பினுள் எழும் பிரச்சினைகள் சன்மார்க்க அடிப்படையில் தீர்க்கப்பட்டு, குடும்பக் கட்டமைப்பு சீராக்கப்பட வேண்டுமானால் முதற்படியாக பெண்களுக்கு இஸ்லாமிய அறிவு பெறுவதற்குரிய வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்று நன்கு உணர்ந்தே இந்த சவாலான பணியைத் துவக்கியுள்ளார்.

இலங்கையிலுள்ள பெண்கள் மதுரசாவில் சகல வசதிகளையும் கொண்ட மதுரசாவாக இது காணப்படுகிறது. அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களின் கல்விப் பணியில் ஸலபிய்யா மகளிர் கல்லூரி ஒரு சாதனை மைல்கல்லாகும்.

ஸலபி ஆலிம்கள் சாதிப்பது போன்று, ஸலபிய்யா மகளிர் பரிவிலிருந்து பட்டம் பெறும் பெண் ஆளுமைகளும் பல சாதனைகளை எதிர்காலத்தில் நிலைநாட்டுவார்கள் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் உண்டு.

இதேபோல், ஏறாவூர் பெண்கள் அரபுக் கல்லூரி, மருதமுனையில் இவரது மாணவர் கலாநி எம்.எல்.முபாரக் மதனி அவர்களால் நடாத்தப்படும் தாருல் ஹுதா பெண்கள் கல்லூரி, இன்னும் இவரது சில ஸலபி மாணவர்களால் நடாத்தப்படும் பஸ்யால அல் உதைமீன் பெண்கள் கல்லூரிகளின் உதயத்திலும் அதற்கான பலவகை வளங்களைப் பெற்றுக் கொடுத்ததிலும் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களின் வகிபாகம் முக்கியமானது.

## மர்கஸ் அந்நூர் :

இலங்கையிலுள்ள தந்தையை இழந்த மாணவர்களுக்கு சரியான இஸ்லாத்தைப் போதித்து அவர்களது பங்களிப்பையும் சமூகத்திற்குக் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வில் ஸலபிய்யா வளாகத்தினுள் அதனுடன் இணைந்ததாக தாருல் ஈமான் என்ற அநாதை மாணவர்களுக்காக துவக்கப்பட்ட மதுரசா தனிப்பிரிவாகச் செயற்பட்டது. பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டு, 08-02-2008 அன்று மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடியில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, இது தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா காலாபீடத்தின் கிளையாக செயற்படுகிறது. இதில் இன்று 146 மாணவர்கள் கற்கின்றனர். இங்கு 65% வீதமான தந்தையை இழந்த மாணவர்கள் கற்கின்றனர்.

## மர்கஸ் தாருல் ஈமான் :

இதேபோல், அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களால் 27-06-2008 அம்பாறை மாவட்டம், சம்மாந்துரையில் ஸலபிய்யா காலாபீடத்தின் இன்னொரு கிளை உருவாக்கப்பட்டது. இங்கும் தந்தையை இழந்த அநாதை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, கல்வி ஊட்டப்படுகிறது. இதில் தற்போது 127 மாணவர்கள் வரை கற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களின் முக்கிய மாணவர்களில் ஒருவரான இஸ்மாயீல் ஸலபி அவர்கள் குறிப்பிடுகையில்,

"தந்தையை இழந்த அநாதைச் சிறுவர்கள் கல்வியைக் கைவிட்டு நெறிதவறிச் செல்லும் ஆபத்தான நிலை உள்ளது. தனக்கிருக்கும் அரபு அமைப்புக்களுடன் உள்ள தொடர்புகளை வலுப்படுத்தி ஆயிரக்கணக்கான அநாதைச் சிறுவர் சிறுமியருக்கு கல்வி நிதிக் கொடுப்பனவுகளை ஜமாஅத் வழங்கி வருகின்றது. இதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் கல்விக்கும் தேசிய நலனுக்கும் ஆஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் பெரும் பங்காற்றி வருகின்றார் எனலாம்." பார்க்க: DHAERA SOUVENIR OF NATIONAL CONFERENCE-2018 P.28

## அல்குர்ஆன் மனனப் பிரிவு:

இஸ்லாமிய துவக்ககாலம் முதல் அதன் நீண்ட நெடிய வரலாற்றில், அல்குர்ஆனை மனனம் செய்து, அதை தங்கள் இதயங்களில் பாதுகாக்கும் ஹாஃப்பாழ்களுக்கு மகத்தான அந்தஸ்தும் மரியாதையும் கண்ணியமும் வழங்கப்பட்டுவருகிறது. சன்மார்க்கக் கலைகளில் முன்னிலை வகித்த இமாம்கள் அல் குர்ஆனை மனனமிட்டவர்களாகவே இருந்துள்ளனர் என்பதை வரலாற்றில் அறிய முடிகிறது.

ஷரீஆத் துறையில் பங்காற்ற வருபவர்களுக்கு முழுக் குர்ஆனையும் மனனமிட்டிருப்பது மிக அவசியம் என்பதை நன்கு உணர்ந்த அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் பறகஹதெனிய தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீட வளாகத்தினுள் அதனுடன் இணைந்ததாக 28-01 - 2014 அன்று ஸலபிய்யா ஹிப்ழ் பிரிவையும் ஆரம்பித்து வைத்துள்ளார்கள். இதில் இணைந்தவர்களில் அறுவர் முழுக் குர்ஆனையும் மனனமிட்டு ஹாபிழ் பட்டம் பெற்றுள்ளனர். ஷரீஆத் துறையுடன் உலகக் கல்வியையும் வழங்கி வந்த தாருத் தவ்ஹீத் அந்த இரண்டு துறைகளுடன் மூன்றாவது ஒரு துறையையும் இணைத்துள்ளமை இந்த நாட்டு தஃவாக் களத்தில் ஒரு புதிய போக்காக இதை நோக்கலாம்.